பொதுப்பணித் துறை 150 ஆண்டுகள்

**நீர்வள ஆதாரத்துறை**

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து./நீ.ஆ.அ.,
வைப்பாறு வடிநில வட்டம், விருதுநகர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர். பொறி. ஆ. சுப்பிரமணியன், பி. இ.,
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து./நீ.ஆ.அ.,

செ.மு.க.எண். 14 / 2018 / ஆ 2 / நாள். 13.11.2018.
(விளம்பி திருவள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 27–ம் நாள்)

((0))

பொருள்: பணியமைப்பு – த.நா.அ.ப. தொகுதி – திரு. பி.கருப்பசாமி, இளநிலை உதவியாளர் – இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 23.10.2017 மு.ப. முதல் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. முதன்மை தலைமைப் பொறியாளர் (க) தலைமைப் பொறியாளர் (க), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செ.மு. எண். எஸ். 3 (3) / 34252 / 2017–2 / நாள். 12.10.2017.
2. தலைமைப் பொறியாளர், பொ.ப.து./நீ.ஆ.அ., மதுரை மண்டலம், மதுரை அவர்களின் செ.மு. எண். அ 1 / 11491 –36 / 2017 / நாள். 29.10.2017.

((0))

பார்வை (1) மற்றும் (2)–ல் காணும் செயல்முறை ஆணைகளைத் திரு பி. கருப்பசாமி, இளநிலை உதவியாளராக இவ்வட்ட அலுவலகத்தில் 23.10.2017 மு.ப. பணிமேற்கொண்டுள்ளார். அதனைத் தொடர்ந்து தனியர், இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்த நாளான 23.10.2017 மு.ப. முதல் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்கப்படுகிறது. தனியரது தகுதிகாண் பருவகாலத்தில் கீழ்கண்ட தேர்வுகளில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அலுவலக நடைமுறை நூல் மற்றும் கணக்குத் தேர்வு பாகம்–1 மற்றும் பாகம்–2 தேர்ச்சி பெற வேண்டும்.

ஆ) பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

இ) தனியருக்கு வழங்கப்படும் வழக்கமான ஆண்டு ஊதிய உயர்வில் முதல் ஊதிய உயர்வு மட்டும் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படும். இரண்டாம் ஊதிய உயர்வு மேற்குறிப்பிட்ட பயிற்சியில் தேர்ச்சி பெற்ற பின்னர் வழங்கப்படும்.

மேலும் தனியரது தகுதிகாண் பருவ காலம் மேற்காணும் நிபந்தனைகளுடன் 23.10.2017 மு.ப. முதல் துவக்கப்பட்டு 3 (மூன்று) ஆண்டுகள் தொடர் பணியில் 2 (இரண்டு) ஆண்டுகள் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து தனியர் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்த நாளான 23.10.2017 மு.ப. முதல் தமிழ்நாடு அரசு பணியாளர் சார்நிலைப் பணித் தொகுதி விதி 29—ன்படியும், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனைக்குட்பட்டும் இவ்வாணை வழங்கப்படுகிறது.

14/11/18

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து./நீ.ஆ.அ., சாத்தூர்,
வைப்பாறு வடிநில வட்டம், விருதுநகர்.

பெறுநர்
திரு பி. கருப்பசாமி,
இளநிலை உதவியாளர்,
வைப்பாறு வடிநில வட்டம், விருதுநகர்.